மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ)—(இ) : ஆம். வேளாண்மைத் துறை அமைச்சரைத் தலைவராகக் கொண்டு விவசாய நலக் குழு ஒன்று அமைக்க உத்தேசித்துள்ளது. இக் குழுவில் வேளாண் வல்லுநர்களும் பெரிய சிறிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் ஆகியோர்களின் சார்பாளர்களும் இடம் பெறுவார்கள். மாவட்ட அளவிலே அத்தகைய குழுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே அமைக்கப்படும். குழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்ட பிறகு குழு செயல் படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவரவர்களே, இந்த விவசாய நலக் குழு விவசாயிகளுக்கு எந்த எந்த வகையில் உதவி செய்கின்ற வகையில் பணியாற்றும்? குழு எப்போது அமைக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : விவசாய நலனைக் காப்பதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு பரிந்துரை களைச் செய்யவேண்டும். வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு உற்பத்திச் செலவினை கருத்தில்கொண்டு விலைகளை நிர்ணயம் செய்தல் போன்ற விவசாய நலன் தொடர்பான பணிகளை மேற் கொள்ளும். விரைவிலே இது அமைக்கப்பட்டவுடன் இது செயல்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்தக் குழுவிலே சட்ட மன்ற உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்களா? அல்லது விவசாயிகள் சார்பிலே பிரதிநிதிகளைச் சேர்க்கும் உத் தேசம் உண்டா? மாநில அளவிலே இருக்கிற குழுவிலே எத் தனை உறுப்பினர்களைப் போடுவதற்கு அரசு உத்தேசித்துள்ளது? மாவட்ட அளவிலே உள்ளகுழுவிலே எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் போடுவதற்கு அமைச்சர் அவர்கள் நட வடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதைப்பற்றியெல்லாம் அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கருத்தும் அந்த ஆய்விலே சேர்த்துக் கொள்ளப் படும்.

மீன்வளக் கல்லூரிக்கான அரசின் நிதியுதவி.

*வினா எண். 11.—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன்வளக் கல்லூரிக்காக வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கு அரசு நிதி அளித்ததா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை?

1981 ஆகஸ்ட் 22]

(இ) இந்தத் திட்டத்தின் மூலம் எத்தனை மீனவர் மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம். (ஆ) ரூ. 110 இலட்சம்.

(இ) மீனவர் மாணவர்கள் எவரும் இக்கல்லூரியில் இதுவரை சேரவில்லை.

ரெவின்யூ மாவட்டந்தோறும் ஒரு மாவட்ட அபிவிருத்தி அதிகாரியை நியமிக்கும் திட்டம்

*வினா எண். 12—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ; திரு. செ. செம்மலை :—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு ரெவின்யூ மாவட்டத்திற்கும், ஒரு மாவட்ட அபிவிருத்தி அதிகாரியை நியமித்து அபிவிருத்தி வேலைகளை அபிவிருத்தி செய்ய தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ): அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இது ரொம்ப காலமாக அறிவிக்கப்பட்டு பரிசீலனையில் இருக்கிறது. அபிவிருத்தி வேலைகளிலே இன்னும் முனைப்பாக இருக்கவேண்டுமென்று சொல்கிறபோது இதிலே சீக்கிரமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை : தற்போது வேளாண்மைத் துறையின்கீழ் உள்ள ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தை உள்ளாட்சித் துறையின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்த யோசனையை மாநில அரசு செயலாக்கியிருக்கிறதா? அப்படிச் செயலாக்குகிறபோது இத்தகைய பதவியை உருவாக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தற்போது ஒருங்கிணைந்த கிராமப் புற வளர்ச்சித் திட்டம் வேளாண்மைத் துறையில் செயல்பட்டு வருகிறது. அதை உள்ளாட்சித் துறைக்கு மாற்றலாமா வேண்டாமா என்பது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS